தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**அதிசய உணவுக் காளான் - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு**

கோவை நரசிம்மநாயக்கன் பாளையம் கருணா பொறியியல் கட்டிட வளாகத்தில் சிதைந்து போன மரத்தின் அடியில் சுமார் 6.50 கிலோ அளவுள்ள அதிசயக் காளான் வளர்ந்திருந்தது. அது பற்றி வளாகத்தின் பட்டறை நடத்தி வரும் ராமசாமி மற்றும் அவரது நண்பர் நந்தகுமார் ஆகியோர் வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியலாளர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் நோயியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ.சு. கிருஷ்ணமூர்த்தி, ஆராய்ச்சி உதவியாளர் ஆ. வெங்கடேசன் மற்றும் முதுநிலை ஆராய்ச்சியாளர் பிரியதர்ஷினி ஆகியோர் இக்காளானைப் பார்வையிட்டு ஆராய்ச்சிக்காக பல்கலைக்கழக ஆய்வுக் கூடத்திற்கு எடுத்துச் சென்றனர்.

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் நோயியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ.சு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறுகையில் இந்த காளான் ‘கேலோசைப் இண்டிகா’ பால்வகை இனத்தைச் சேர்ந்தது என்றும் இதன் ஆயுட்காலம் 7 நாட்கள் என்றும் கூறினார்.

இதே போன்று கடந்த சில ஆண்டுகளாக மே மற்றும் ஜுன் மாதங்களில் கோடை மழைக்கு பின் அதிசயிக்கத் தக்க அளவில் இவ்வகை காளான்களில் சுமார் 22 வகையானவை தற்போது ஆராய்ச்சியில் உள்ளதாகவும் வருங்காலங்களில் இவற்றில் சிறப்பான தேர்வுகள் கண்டறியப்பட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் அதிக விளைச்சலும் சிறப்பான மனமும் உள்ள பால் காளான் இரகங்கள் வெளியிடப்படும் எனவும் கூறினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்